# குச்சவெளி பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜுன் 26 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 டிசெம்பர் 23 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, குச்சவெளி பிரதேச சபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான குச்சவெளி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் வருவாயை ஈடுபடுத்துவதற்குமென சபை ரூபா 97,550,980 பெறுமதியான நிலையான சொத்துக்களைப் பயன்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், அச் சொத்துக்கள் மீதான தேய்மான நிதியேற்பாடு நிதிசார் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக, நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் சபையின் உண்மையான செலவினத்தைப் பிரதிபலிக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கென அறவிடப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை நிதிசார் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஆ) தொங்கற் கணக்கு மீதியான ரூபா 1,523 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் பொருட்டு புல்மோட்டையில் உள்ள இடம் பெயர்ந்தோருக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 2,354,448 அந்த நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படவில்லை.

(ஆ) கொடுப்பனவு செய்யப்படாத சம்பளமும் கூலியுமாகிய ரூபா 425,371 மீதியானது பல ஆண்டுகளாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கணக்குகளில் உள்ள பின்வரும் விடயங்கள் அவற்றிற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாகச் சரி, பிழை பார்க்கப்பட முடியாதிருந்தன.

| விடயம் | பெறுமதி ரூபா | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் | 37,458,666 | உரித்துறுதி, நிலையான சொத்துப் பதிவேடு |
| லொறியும் இயந்திரமும் | 1,822,623 | நிலையான சொத்துப்பதிவேடு, பொருட்கணிப்புச் சபை அறிக்கை |
| மோட்டார் வாகனங்கள் | 785,993 | |
| வருவாய்க் கடன்பட்டோர் | 14,331,350 | விரிவான பட்டோலை, மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| முற் கொடுப்பனவு | 11,545,305 | |
| கேள்வி வைப்பு | 584,635 | விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு |
| தீர்த்து வைக்கப்படாத சம்பள முற்பணம் | 299,018 | |
| வருவாய் வைப்பு | 156,650 | |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,388,432 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலுஞ் கூடிய வருவாய் ரூபா 7,865,369 ஆகும்.

### 2.2 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத்திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையானது வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமையைச் சுட்டிக்காட்டியது.

## 2.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்கத்தின் பணம் அல்லது களஞ்சியங்களது பாதுகாப்பிற்கு நிர்வாகரீதியாகப் பொறுப்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 இன் IX அத்தியாயத்தின் 180 ஆம் விதிக்கமைய பிணைப் பணம் பெறப்படவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 512,368 பெறுமதியான 130 காசோலைகள் தொடர்பாக மாகாண நிதிப்பிரமாணம் 237 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மாகாண நிதிப் பிரமாணம் 432 க்கமைய வாகனங்களது சம்பவப் பதிவேடும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் நாளதுவரையாக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முகாமைகள் மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஈ) கையிருப்புக் கட்டுப்பாடு
(உ) முற்பணத்தை தீர்த்து வைத்தல்